தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைம் - 2022

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் ("அதிகாரசபை") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை கருத்திற் கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
அசையா சொத்துக்கள் தொடர்பான கணக்கீட்டு கொள்கை நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் இலங்கை உற்பத்திப் பொருட்களுக்கான மின் வர்த்தக இணையத்தளத்தின் தரவு அமைப்புக்காக கடந்த மற்றும் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுகளில் முறையே ரூ. 8,640,000 மற்றும் ரூ. 960,000 ஆக மொத்தம் ரூ. 9,600,000 இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் பிரகாரம் அசையா சொத்துக்களின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டிலும் வர்த்தக இணையத்தளத்தை செயலில் பயன்படுத்த முடியாததால், அதற்கான செலவுகள் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவுகளாகப் பதியப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வர்த்தக இணையத்தளம் செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், அவை அசையா சொத்துக்களாக பதியப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்கீட்டு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் பெறப்பட்ட மீண்டெழும் அரசாங்க மானியங்கள் ரூ. 2,690,000 தொகை மூலதன மானியங்களாகக் கணக்கிடப்பட்டிருந்தன.	2023 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகளில் சீர் செய்யப்படும்.	அரசாங்க மானியங்கள் சரியாக கணக்கிடப்படல் வேண்டும்.

(ஆ)	அரசாங்க மானிய பெறுவனவுகளான ரூ. 17,490,000 ரூபாவை காசுப் பாய்ச்சல் அறிக்கையில் ரூ. 206,400 என காண்பித்ததன் காரணமாக, நிதிச் நடவடிக்கைகளலிருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூ. 17,283,600 இனால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.	மூலதனச் செலவினங்களுக்காகப் பெறப்பட்ட பணத்திலிருந்து நிலையான சொத்துக்களுக்காகப் பெறப்பட்ட பணம் மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளதால், காசுப் பாய்ச்சல் கூற்றின் நிலுவைத் தொகையில் பாதிப்பு இல்லை. இருப்பினும், அனைத்து வரவுகளும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டியிருப்பதால், அடுத்த கணக்கு ஆண்டில் அதைச் சீர்செய்ய உடன்படுகின்றேன்.	அரசாங்க மானியங்கள் பெறுவனவு சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின்			
(i)	நிதி பிரமாணம் 103 மற்றும் 104	2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் காணாமற்போயிருந்த ரூ. 99,890 பெறுமதியான ஒரு மடிக்கணினி மற்றும் ரூ. 61,900 பெறுமதியான 2 கையடக்கக் கணினிகள் (டேப்லெட்) தொடர்பில் நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், நிரந்தரத் தீர்மானம் எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்க முன்மொழியப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	நிதி பிரமாணம் 119	PD-6379 இலக்க கப் வாகனம், 2020 ஆம் ஆண்டில் தலைவரால் இயக்கப்படும் போது ஏற்பட்ட கோளாறை பழுதுபார்ப்பதற்காகச் செலவிடப்பட்ட ரூ. 498,110 பணத்தை, நிதி பிரமாணத்திற்கு அமைவாக	கைத்தொழில் அமைச்சின் சட்டப் பிரிவு இது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதுடன், சட்டமா அதிபர் திணைக்களம் எமது நிறுவனத்திடமும் இது	நிதி பிரமாணம் பிரகாரம் நட்டம், பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

		மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் தலைவரிடம் இருந்து அறவிட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் திசெசம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	குறித்து விடயங்களைக் கோரியுள்ளது.	
(iii)	நிதி பிரமாணம் 371(2)(ஆ)	மீளாய்வாண்டில் 174 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூ. 2,584,085 முற்பணங்கள், அதற்கான பணகள் முடிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை மேலும், 2017, 2018, 2019 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் வழங்கப்பட்ட முறையே ரூ. 326,250, ரூ. 476,010, ரூ. 402,072 மற்றும் ரூ. 213,575 உள்ளடங்கலாக, மொத்தமாக ரூ. 1,417,907 பெறுமதியான முற்பணங்களும் 2025 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் கணக்கீடு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டுக்குரிய ரூ. 4,327,165 முற்பண மீதி 2024.10.31 ஆம் திகதியளவில் ரூ. 1,297,150 வரையில் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2017, 2018, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான முற்பணங்கள் கணக்கீடுகள் தீர்க்கப்படுவது குறித்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கணக்கீடு தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நிதி பிரமாணம் பிரகாரம் முற்பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(iv)	2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 ஊடாக திருத்தப்பட்ட நிதி பிரமாணம் 756(6)	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இருப்பு பொருள் சுற்றாய்வு அறிக்கைகள் 2025 யூன் 20 ஆம் திகதியாகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை.	2022 ஆம் ஆண்டிற்கான இருப்பு பொருட்கள் சுற்றாய்வு சபை நியமனம் தாமதமாகியுள்ளதை ஒப்புக்கொள்கிறேன். 2022 ஆம் ஆண்டிற்கான சுற்றாய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 02 ஆம் திகதி சுற்றாய்வு சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான இருப்பு பொருட்கள் சுற்றாய்வுச் சபை 2023 திசெம்பர் 11 ஆம் திகதி நியமிக்கப்பட்டு, வேலைகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய திகதியில் இருப்பு பொருள் சுற்றாய்வுகள் நிறைவு செய்யப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,740,582 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,687,298 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,946,716 ஆன வீச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆண்டிற்குரிய மூலதன மானியங்கள் பெறுவனவு ரூபா 17,504,312 இனால் குறைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

	கணக்கீட்டு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	அதிகாரசபைக்காக ISO சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூ 71,762 தொகையும், 2017 ஆம் ஆண்டில் ரூ. 125,000 தொகையும், 2018 ஆம் ஆண்டில் ரூ. 35,880 தொகையும், ஆக மொத்தம் ரூ. 232,642 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ISO சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிறுவனம் பல இடங்களுக்கு மாற்றப்பட்டதால், ISO பெறுவதற்குத் தேவையான சூழலை மீண்டும் அமைத்துக்கொள்ள கணிசமான அளவு பணத்தைச் செலவிட வேண்டியிருந்தது. 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அதிகாரசபைக்கு ஒரு நிரந்தர இடம் கிடைத்திருந்தாலும், ISO போன்ற ஒரு சான்றிதழைப் பெறுவதற்கு அதிகாரசபையின் செயற்பாடுகளை மேலும் ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் காணப்பட்டது. தற்போது ISO பெறுவதற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிராததுடன் அதிகாரசபையின் மேற்குறிப்பிட்ட வேலைகள் நிறைவடைந்ததன் பின்னர் ISO பெறுவதற்கான தேவையான நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட முடியும்.	ISO சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக செயற்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டங்களின்படி, சலுகை பெற்ற வணிகங்கள் (Franchise Shops) மூலம் குறைந்தபட்சம் 25 விநியோகஸ்தர்களை அறிமுகப்படுத்தத்	சலுகை பெற்ற வணிகங்களை ஆரம்பிப்பதற்குப் போதுமான பணம் இன்மையே இதற்குக் காரணமாகியுள்ளது. Epic Lanka நிறுவனம் மற்றும் Daraz, Dialog, Mother Sri Lanka Foundation போன்ற	திட்டமிடப்பட்ட பணிகள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் ஒரு சலுகை பெற்ற வணிகமெனிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 'Made in Sri Lanka' வர்த்தக இணைய வாசலில் குறைந்தபட்சம் 1000 விநியோகஸ்தர்களைப் பதிவு செய்வதற்கும், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கான தரவு அமைப்பை நிறுவும் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 750,000 தொழில்முனைவோரைப் பதிவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முறையே 216 வழங்குனர்களும் 260,000 தொழில்முனைவோரும் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தனர்.	தனியார் துறை நிறுவனங்களுடன், இணைய வாசலில் காணப்படும் பொருட்களைப் களஞ்சியப்படுத்தல் போன்ற நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடி, பொருத்தமான தீர்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	
(இ)	2016 ஏப்ரல் 11 திகதிய அமைச்சரவைப் பத்திர இல. NP/IND/CM/16/02 இன் கீழ், மாக்கந்துர கைத்தொழில் பேட்டையில் ஒரு பொறிமுறை மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்ற நிலையமாக (Incubator and Technology Transfer Center), 2017 ஆம் ஆண்டில் B Express Ltd எனும் பெயரில், வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று ஆரம்பிக்கப்பட்டு, பங்குரிமையில் 60 சமவீதம் அதிகாரசபைக்குச் சொந்தமான வகையில் வரையறுக்கப்பட்ட கம்பனிொயன்றாக கம்பனிகள் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:		
(i)	அதிகாரசபையுடன் இணைந்த துணை கம்பனி 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு வரையில் நிதிக் கூற்றுக்களை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராத போதிலும், இது குறித்து அதிகாரசபையின் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	அதிகாரசபையின் கணக்காளரினால் 2022 மற்றும் 2023 மார்ச் மாதம் வரையான ஆண்டுகளின் இறுதி கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதால், இதுவரையில் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாத காரணத்தினால், பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டவுடன் கணக்குகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன.	நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ii)	கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட MIC/SME/13/ITTC-01 இலக்க மற்றும் 2016 ஆகஸ்ட் 06 திகதிய கடிதத்தின்படி, தொடர்புடைய கம்பனியின் செயற்பாட்டு செலவுகள் ஒருங்கிணைந்த நிதிக்கு செலவுச் சுமையாக இருக்கக் கூடாது என்ற போதிலும், மீளாய்வாண்டினுள் ரூ. 500,000 அரசாங்க நிதியானது நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது	ஆரம்ப கட்டத்தில் ஒரு முன்மாதிரித் திட்டமாக செயற்பட்டதால் கணிசமான வருமானத்தை ஈட்ட முடியவில்லை. அதன் பிறகு, கோவிட் தொற்றுநோய் காரணமாகப் பல தடவைகள் மூடப்பட்டிருந்ததால், செயறதிட்டத்தின் இலக்குகளை அடைய முடியவில்லை. இந்தக் காரணத்தினால், திட்டத்தை மீண்டும் ஆரம்பித்துச் செயற்படுத்துவதற்காக, செயற்பாட்டு செலவினங்களுக்காக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை ரூபா 5 இலட்சத்தினை வழங்கியது.	உடன்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(iii)	நிறுவனத்தின் சொத்து பதிவேட்டின்படி, ரூ. 21,189,016 மதிப்புள்ள 30 இயந்திரங்கள் கம்பனியிடம் இருந்தபோதிலும், 2021 நவம்பர் 16 திகதிய பீ.ஈ.டி 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையினால் பிரகடனப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கையேட்டின் 6.7 பந்தியின்படி வருடாந்த சொத்து மதிப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை. இவற்றில் 9 இயந்திரங்கள் 2 வருடங்களுக்கும் மேலாக செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் தொழில்முனைவோரின் தேவைகளை கருத்தில் கொள்ளாமல் கொள்வனவு செய்யப்பட்டதால், தொழில்முனைவோர் அந்த இயந்திரங்களுக்கு விண்ணப்பிக்காததன் காரணமாக 04 இயந்திரங்கள் பயன்பாடின்றி இருந்தன. தற்போது பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் கொள்ளளவும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன.	சொத்துக்கள் தரப்படுத்தப்பட்ட முறையில் சரிபார்க்கப்பட்டு வகைப்படுத்தப்படாமல் இருந்தபோதிலும், சொத்துக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டுள்ளது. கோவிட் தொற்றுநோய் வருவதற்கு முன்னர், இந்த இயந்திரங்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி வயம்ப பல்கலைக்கழகத்தினால் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. கோவிட் தொற்றுநோய் காரணமாகப் பல இயந்திரங்கள் செயலிழந்தன. தற்போது இந்த இயந்திரங்களை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவரவும், இயந்திரங்களை மீண்டும் விளம்பரப்படுத்தவும் மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	இயந்திரங்கள் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(iv)	பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பேரில், நிலையத்தின் முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2023 ஆம்	மத்திய நிலையத்தின் எதிர்காலத் திட்டம் மற்றும் எதிர்கால நோக்குநிலை குறித்து 2022 ஒக்தோபர் 28	நோக்கங்களை அடைய தேவையான நடவடிக்கைகள்

	ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் ஒரு தனியார் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்தைத் தெரிவு செய்தது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	ஆம் திகதி நடாத்தப்பட்ட கலந்துரையாடலின்போது, மத்திய நிலையத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக முழுநேர முகாமையாளர் ஒருவரையும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரையும் நியமிக்க தீர்மானிக்கப்பட்டது. 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதி NEDA இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் இத்தீர்மானம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், மேலதிக மதிப்பீட்டிற்காக 2023 மார்ச் 24 ஆம் திகதி செயலாளரின் தலைமையில் அமைச்சில் மற்றுமொரு கூட்டம் நடாத்தப்பட்டது. இக்கூட்டத்தில் TRACE மத்திய நிலையத்தை முகாமைத்துவம் செய்வதற்குப் பொருத்தமான விண்ணப்பதாரியாக அடையாளம் காணப்பட்டது. அந்த நிறுவனம் இலாப நோக்கற்ற அமைப்பாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆரம்ப மூலதனத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு சதுர அடிக்கு அதிகூடிய வெளிநாட்டு நாணய வருமானத்தை ஈட்டுதல் மற்றும் எவ்வித செலவுகளுமின்றி இணை அடைகாப்பக மத்திய நிலையங்களை முகாமைத்துவம் செய்தல் என்ற அடிப்படையில் TRACE தெரிவுசெய்யப்பட்டது. அதற்குரிய சகல தகவல்களும் எம்மிடம் உள்ளன.	எடுக்கப்பட வேண்டும் மற்றும் கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.
(ஈ)	2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில்முனைவோர் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 13(ஆ) மற்றும் 13(எ) பிரிவுகளின்படி, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகார சபையின் பின்வரும்		

	நோக்கங்களை அடைந்துகொள்வதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.		
(i)	உள்நாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டு சந்தைகளில் வெற்றிபெறக்கூடிய வகையில் சர்வதேசமயமாக்கும் நோக்கத்துடன், இலங்கைக்கு வெளியே நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஊக்குவிப்புக்களை வழங்குதல்.	இதற்கென விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படாவிட்டாலும், தற்போது அமுலில் உள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் தொழில்முனைவோருக்கு வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது. எதிர்காலத்தில் வர்த்தக சபைகளை ஒன்றிணைத்து மேலும் பல வாய்ப்புக்களை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.	சட்டத்தின் நோக்கங்கள் அடைந்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
(ii)	தொழில்நுட்ப அபிவிருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் காப்புரிமையின் வணிகமயமாக்கல் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியமொன்றை ஸ்தாபித்தல்.	தொழில்நுட்ப நிதியமொன்று இல்லாவிடினும், தொழில்நுட்ப அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகள் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. தொழில்நுட்ப நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான SEED money பெற்றுக்கொள்வது தற்போதைய நிலையில் கடினமாக உள்ளபோதிலும், எதிர்காலத்தில் வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தை அங்கீகாரத்துடன் இந்நிதியத்திற்காக பயன்படுத்துவதற்கு அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.	சட்டத்தின் நோக்கங்கள் அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
(உ)	அதிகார சபையின் ஒவ்வொரு பிரிவிலும் பயன்பாட்டில் உள்ள நிலையான சொத்துக்களுக்கு நியம வகைப்படுத்தல் முறைமை பின்பற்றப்படவில்லை என்பதுடன், நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் பௌதீக ரீதியான அளவானது நிலையான சொத்துக்களின்	அதிகார சபையின் சொத்துக்கள் QR குறியீடுகளைப் பயன்படுத்தி இலக்கமிடப்பட்டுள்ளதோடு, அதன் மேம்படுத்தல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நிலையான சொத்துக்கள் உரிய வகையில் வகைப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

அளவுடன் ஒப்பிட்டிருக்கவில்லை. சொத்துக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பின்பற்றப்படாமையினால், சொத்துக்களின் பௌதீக இருப்பு மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமல் இருந்தது.